# கடைபோக உருளைக்கிழங்கிற்கு அறுவடையின் போது நிலையான விலை கிடைக்கும்

உலகளவில், இந்தியா உருளைக்கிழங்கு உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாமிடம் வகிக்கிறது. இந்தியாவிலிருந்து உருளைக்கிழங்கு இலங்கை, அரபு நாடுகள், மொரிஷியஸ், நேபாளம், சிங்கப்பூர், மாலத்தீவுகள் மற்றும் குவைத் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. உலகளாவிய உருளைக்கிழங்கு ஏற்றுமதி சந்தையில், இந்தியா குறைந்த அளவே ஏற்றுமதி செய்கிறது, இதற்கு காரணம் நம் நாட்டு கிழங்கின்அதிக விலை மற்றும் குறைந்த தரமேயாகும்.

இந்தியாவில், 2014-15ல் உருளைக்கிழங்கு 20.60 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 449 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இது 2013-14ம் ஆண்டு உற்பத்தியை விட 8 சதவீதமும், சாகுபடி பரப்பில் 4 சதவீதமும் அதிகமாகும். 2014-15ல், உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம், பீகார், அசாம், மத்தியப்பிரதேசம், பஞ்சாப் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் மொத்த உருளைக்கிழங்கு உற்பத்தி பரப்பில் 85 சதவீதமும், உற்பத்தியில் 90 சதவீதமும் பங்களிக்கின்றன. நடப்பாண்டில் குஜராத் மாநிலத்தில் வழக்கமாக கோதுமை பயிரிடும் விவசாயிகள் மாற்று பயிராக உருளைக்கிழங்கினை பயிர் செய்துள்ளனர். 2014-15ல் இந்தியாவில் உருளைக்கிழங்கு ஏற்றுமதி 12.56 இலட்சம் டன்களாகும். இது 2013-14ம் ஆண்டு ஏற்றுமதியை விட 47 சதவீதம் அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டில், 2014-15ல் உருளைக்கிழங்கு 5000 எக்டரில் பயிரிடப்பட்டு 1.27 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இது 2013-14ல் சாகுபடி பரப்பை விட 5 சதவீதமும், உற்பத்தியில் 9 சதவீதமும் அதிகரித்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கிற்கு மற்ற மாநிலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கை விட அதிக விலைக்கு விற்பனையாகிறது. இதற்கு காரணம் குளிர்பதன வசதியின்றி இதனை நீண்ட காலத்திற்கு இருப்பு வைக்கலாம். தமிழ்நாட்டில் மலை பகுதிகளான திண்டுக்கல், நீலகிரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உருளைக்கிழங்கு பயிரிடப்படுகிறது.

கடைபோகம் உருளைக்கிழங்கு செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் பயிரிடப்பட்டு, டிசம்பர்-ஜனவரி மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில், குப்ரிஜோதி மற்றும் ஜலந்தர் ஆகிய இரகங்கள் பெரும்பான்மையாக பயிரிடப்படுகிறது. குஜராத், கர்நாடகா மற்றும் உத்திரப்பிரதேசம் போன்ற பிற மாநிலங்களிலிருந்து வரும் உருளைக்கிழங்குகள் விதை உபயோகத்திற்க்காக மட்டுமே இங்கு குளிர்பதன கிடங்கில் சேமிக்கப்படுகிறது.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 23 ஆண்டுகளாக மேட்டுபாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் (NCMS) நிலவிய உருளைக்கிழங்கின் பண்ணை விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆய்வு செய்து, சந்தை ஆய்வுகளையும் மேற்கொண்டது.

ஆய்வு முடிவுகளின்படி, விவசாயிகளுக்கு நல்ல தரமான உருளைக்கிழங்கிற்கு டிசம்பர்-ஜனவரி மாதங்களில், பண்ணை விலையாக கிலோவிற்கு ரூ.19 முதல் ரூ.21 வரை விலை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் விலையினை அடிப்படையாக கொண்டு விவசாயிகள் தங்கள் கடைபோக உருளைக்கிழங்கு சாகுபடியை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் :**</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி: 0422-2431405

<u>**மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் :**</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்
விஜயநகரம்
உதகமண்டலம் - 643 001.
தொலைபேசி: 0423-2442170